பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 19 ஞாயிற்றுக்கிழமை 04.09.2022 கதிர் 190

## காலியில் ஒருவர் சுட்டுக் கொலை!



காலி, பிடிகல - தல்கஸ்வல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பிடிகல - மியாகம பிரதேசத்தைச்சேர்ந்த 31வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ☞2

# கோட்டாவை உடன் கைது செய்யுங்கள்

### காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் வலியுறுத்து



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ள நிலையில் அவரை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி பதவியைத் துறந்தமையால் கோட்டாபய ராஜபக்ஷ விடுபாட்டுரிமையை –சிறப்புரிமையை இழந்துள்ளார். ☞2

## வந்த கோட்டா வீட்டுக்குள்; போராடியோர் சிறைக்குள்

### சஜித் கடும் சீற்றம்



போராட்டக்காரர்களால் விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் நாடு திரும்பி வீட்டுக்குள் இருக்கின்றார். ஆனால், போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது அரசு வன்முறையைப் பிரயோகித்து அவர்கள் மீது அடக்குமுறைகளை மேற்கொண்டு அவர்களைச் சிறைச்சாலைகளுக்குள் அடைத்து வருகின்றது. ☞2

## ராஜபக்ஷக்களின் மீளெழுச்சி விரைவில் நடந்தே தீருமாம்!


### கோட்டாவின் வருகையோடு எக்காளமிடுகிறார் மஹிந்த



ராஜபக்ஷக்களைக் கீழ்த்தரமாக விமர்சிக்கவேண்டாம். ராஜபக்ஷக்களின் எழுச்சி விரைவில் நடக்கும். உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் சூழ்ச்சிகளால் ராஜபக்ஷக்களின் அரசியல் பயணத்துக்கு ஒருபோதும் முடிவு கட்ட முடியாது.

- இவ்வாறு முன்னாள் ☞2

## சஜித் அணியினருக்கு ஐ.தே.கவினர் அழைப்பு



சஜித் பிரேமதாஸ உட்பட கட்சியில் இருந்து வெளியேறியோர் மீண்டும் தாய்வீடு திரும்பலாம். அதற்கு எவ்வித தடையும் இல்லை.

- இவ்வாறு ஐ.தே.க.வின் சிரேஷ்ட உறுப்பினரும் ஜனாதிபதியின் பாதுகாப்பு விவகார ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

எமது கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன. பிரிந்து சென்றவர்கள் யாராக இருந்தாலும் தாய்க் கட்சியுடன் இணைந்து கொள்வதில் தடையே இல்லை. ☞2

## பெண்ணொருவர் அடித்துக்கொலை

கொழும்பு, கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டோவிட்ட பிரதேசத்தில், பெண் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

கல்கிஸை, படோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயது பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான பெண்ணை களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் ☞2

## கோட்டா தப்பியோடவும் இல்லை; விரட்டியடிக்கப்படவும் இல்லை!

### அவர் நாடு திரும்பியமை பற்றி பஸில் விசித்திரமான கருத்து



கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டைவிட்டுத் தப்பியோடவும் இல்லை. அவர் விரட்டியடிக்கப்படவும் இல்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் ☞2

## கோட்டாவுடன் மஹிந்த இரு மணிநேரம் பேச்சு


நாடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அவரின் சகோதரரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ நேரில் சந்தித்தார்.

கோட்டாபயவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு நேற்றுச் சென்று அவரைச் சந்தித்த மஹிந்த, அவருடன் இரு மணி நேரம் உரையாடினார்.

இதையடுத்து, பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 இற்கும் மேற்பட்டோர் கோட்டாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர். மக்கள் புரட்சிகாரணமாக இலங்கையிலிருந்து வெளியேறிய முன்னாள் ☞2

## வடமராட்சியில் தொடர் மோதல்; களமிறக்கப்பட்டது எஸ்.ரி.எவ்.

### 25 பேரைத் தேடி வேட்டை



யாழ்., வடமராட்சி, பருத்தித்துறை - துன்னாலை மேற்குப் பகுதியில் இரு கிராமங்களுக்கு இடையேயான மோதல் 4 நாள்களாக நீடிக்கும் நிலையில் ஏழு வீடுகள் சேதமடைந்துள்ளன. இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 25 மேற்பட்டோர் தேடப்பட்டு வருகின்றனர்.

இந்தத் தகவலை நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். ☞2

## மொட்டுக் கட்சிக்குள் மேலும் பிளவு; டலஸ் பக்கம் மேலும் சிலர் தாவுவர்

### சிங்கள வார இதழ் செய்தி



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் டலஸ் ஆதரவு அணியில் இணையக்கூடும் என 'மொட்டு'க் கட்சியின் உள்ளகத் தகவல்களை மேற்கோள்காட்டி சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான பேச்சுகள் வெற்றியளித்துள்ளனஎனவும், விரைவில்தாவல்அரங்கேறும் எனவும் தெரியவருகின்றது.

பெரமுனவில் இருந்து டலஸ் அழகப் பெரும, ☞2

## முள்ளு குத்தியதால் குடும்பஸ்தர் மரணம்

முட்கிளுவை கதிகால் முள்ளுக் குத்தியதால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ், அனலைதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குமாரசாமி தம்பிராசா (வயது - 70) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 31ஆம் திகதி அவருக்கு முள்ளு குத்தியுள்ளது. காலில் கொதி வலியாக ☞2

## 'செல்பி' எடுத்த இளைஞர் நீர்வீழ்ச்சியில் விழுந்து பலி

ஹல்துமுல்ல, உடவேரிய தோட்டத்தில் செல்பி எடுக்கும்போது இளைஞர் ஒருவர் நீர்வீழ்ச்சியில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

நீர்வீழ்ச்சியைப் பார்வையிடச் சென்ற இரண்டு இளைஞர்கள் அதனைப் பார்வையிட்ட பின் அவர்களில் ஒருவர் செல்பி எடுக்கச் சென்றபோது தவறி நீர்வீழ்ச்சியில் விழுந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்வீழ்ச்சிக்கு கீழே 200 மீற்றர் ஆழத்தில் உயிரிழந்தவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

துகுருதலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

## வடமராட்சியில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாள்கள், கற்கள் மற்றும் போத்தல்களினால் மோதல்கள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் 7 முறைப்பாடுகள் நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்துள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

நான்கு நாள்களுக்கு முன்னர் இரண்டு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாற்றமடைந்தது. அது பின்னர் கிராமங்களுக்கு இடையிலான மோதலாக மாறியுள்ளது. சம்பவத்தில் ஏழு வீடுகள் சேதமடைந்துள்ளன. சிலர் காயமடைந்துள்ளனர்.

சம்பவ இடத்தில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். எனினும், மோதல்கள் தொடர்கின்றன.

இதுவரை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் பெயர் குறிப்பிடப்பட்ட 25 பேர் தேடப்பட்டு வருகின்றனர்.

நேற்று நண்பகல் 12.30 தொடக்கம் மாலை 6.30 மணிவரை அடங்கியிருந்த மோதல் மீண்டும் நேற்று இரவு முதல் மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது - என்று நெல்லியடிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## முள்ளுக்குத்தி...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருப்பதாக அனலைதீவு மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்றுள்ளார். அங்கிருந்து ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

## கோட்டாவை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவரை நீதியின் முன்நிறுத்த வேண்டும் என்று கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து அகற்றிய காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டங்களுக்குத் தலைமை வகித்தவர்களில் ஒருவரான இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோட்டாவை ஏற்றுக்கொள்வதற்கு எந்த நாடும் தயாரில்லாத காரணத்தால்தான் அவர் நாடு திரும்பினார் என்று தெரிவித்துள்ள ஜோசப் ஸ்டாலின் அவர் மறைந்திருப்பதற்கு எங்கும் இடமில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

22 மில்லியன் மக்களுக்குப் பெரும் துன்பத்தை ஏற்படுத்தியமைக்காக அவரைக் கைது செய்யவேண்டும் என்றும், அவர் இழைத்த குற்றங்களுக்காகத் தண்டிக்கவேண்டும் என்றும் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமையால் அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்றும், தற்போது அவர் சிறப்புரிமையை இழந்துள்ளமையால் அந்த வழக்குகளில் அவர் மீளவும் சேர்க்கப்பட வேண்டும் என்றும் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார்

## காலியில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்நபர் நகருக்குச் சென்று மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, வீட்டின் அருகே அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

பதுங்கியிருந்த நபர் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த நபர் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

மேலும், விசாரணையில் உயிரிழந்தவர் கடன் கொடுத்தவர் என்பது தெரியவந்துள்ளது.

பணத் தகராறு காரணமாக இந்த நபர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் இதுவரை அடையாளம் காணப்படாத அதேவேளை, விசாரணைகளுக்காக விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## சஜித்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆனால், நாங்கள் எந்தக் கட்சியில் இருந்தும் உறுப்பினர்களை கவர்ந்து இழுக்க மாட்டோம். விரும்பியோர் வரலாம் என்பதே எமது கொள்கை - என்றார்.

## மொட்டுக் கட்சி...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உட்பட 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறியுள்ளனர். அவர்கள் தற்போது புதியதொரு அரசியல் இயக்கத்தை உருவாக்கியுள்ளனர்.

இந்நிலையில், டலஸ் தரப்பை இணைத்துக்கொள்வதற்கு ஐக்கிய மக்கள்சக்தியும், விமல்தரப்பும் முயற்சித்து வருகின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே 'மொட்டு'க் கட்சி உறுப்பினர்கள் சிலர் டலஸ் பக்கம் சாயவுள்ளனர்.

## ராஜபக்ஷக்களின் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் நாடு திரும்பியுள்ளமை ராஜபக்ஷக்களின் மீளெழுச்சிக்கு வழிவகுக்கும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ள நிலையிலேயே அவரின் சகோதரரான மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்ஷக்கள் தோற்கவும் இல்லை, தோற்கடிக்கப்படவும் இல்லை. சுயமாகப் பதவிகளிலிருந்து விலகிய அவர்கள் விரைவில் மீளெழுச்சி பெறுவார்கள்.

எதிரணியினர் ராஜபக்ஷக்களைக் கண்டபடி வசைபாடுகின்றனர்; குறைத்து மதிப்பிடுகின்றனர். ராஜபக்ஷக்களின் அருமையும், திறமையும், எமக்கு ஆணை வழங்கிய மக்களுக்கு நன்றாகப் புரியும்.

உள்நாட்டு, வெளிநாட்டு சூழ்ச்சிகளால் ராஜபக்சக்களின் அரசியலுக்கு முடிவுகட்ட முடியாது.

தேர்தல் ஒன்று நடந்தால் அதில் ராஜபக்சக்களினதும் 'மொட்டு'க் கட்சியினரினதும் கைகள் மீண்டும் ஓங்கும். அந்தத் தேர்தலில் எதிரணியினர் வழமை போன்று தோல்வியையே தழுவுவார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியதை நான் வரவேற்கின்றேன். தனது மீள் அரசியல் பிரவேசம் தொடர்பில் அவர் சிறந்த முடிவை எடுப்பார் - என்றார்.

## கோட்டா தப்பி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்களின் மாபெரும் எதிர்ப்புப் போராட்டங்களையடுத்து இலங்கையைவிட்டுத் தப்பியோடி ஜனாதிபதி பதவியை இராஜிநாமா செய்த நிலையில் வெளிநாடுகளில் அடைக்கலம் தேடி அலைந்து திரிந்த கோட்டாபய ராஜபக்ச மீண்டும் நாடு திரும்பியுள்ளார். இந்நிலையிலேயே அவரின் சகோதரனான பஸில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் சில காப்பக்களின் சதி முயற்சியால் திடீரென எழுந்த கொந்தளிப்பு நிலைக்குத் தீர்வுகாணவே கோட்டாபய ராஜபக்ஷ சுயமாக நாட்டை விட்டு வெளியேறி ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியிருந்தார்.

நாட்டில் தற்போது அமைதி நிலவுவதால், அவர் மீண்டும் இங்கு வந்துள்ளார்.

அவர் இலங்கைப் பிரஜை. ஒரு முன்னாள் ஜனாதிபதி. இந்நிலையில், அவர் வெளிநாடுகளில் தங்க வேண்டிய அவசியம் இல்லை.

நாடு திரும்பியுள்ள அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்குரிய சிறப்புரிமைகளை அரசு வழங்குகின்றது.

அவர் விரும்பினால் மீண்டும் 'மொட்டு'க் கட்சி ஊடாக அரசியலுக்குள் நுழையலாம். இது தொடர்பில் அவரே முடிவு எடுக்க வேண்டும் - என்றார்.

## பெண்ணொருவர்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். தாக்குதலுடன் தொடர்புடைய நபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## கோட்டாவுடன்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நள்ளிரவு மீண்டும் நாடு திரும்பினார்.

தாய்லாந்திலிருந்து சிங்கப்பூர் வழியாக பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அவர் நாட்டை வந்தடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வந்த கோட்டா...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இருநூற்று இருபது இலட்சம் மக்கள் பாரிய துன்பங்களை எதிர்கொண்டு வரும் சந்தர்ப்பத்தில், அரசு அமைச்சுப் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கு முண்டியடித்துக்கொண்டு இருக்கின்றது.

எதிர்காலத்தில் மின்வெட்டு ஏற்படும்போது நாட்டு மக்கள் நடுங்கத் தொடங்குவார்கள். மக்கள் ஏற்கனவே வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் தற்போது சந்தர்ப்பவாத அரசியலே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான சந்தர்ப்பவாத அரசியலில் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியோ ஒருபோதும் பங்கேற்காது.

மத்திய வருமானம் கொண்ட நாடாகவே ஆரம்பத்தில் எமது நாட்டைக் கூறினர். தற்போது எமது நாடு குறைந்த வருமானம் பெறும் நாடுகளின் பட்டியலிலேயே இணைக்கப்பட்டுள்ளது.

பாணின் விலை 300 ரூபாவாக அதிகரித்துள்ளது. மின்கட்டணம், நீர்க்கட்டணம் என அனைத்துக் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. மண்ணெண்ணெய்யின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது - என்றார்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கோட்டாவின் மீள் வருகை

ஜுலை 10 ஆம் திகதி நாட்டை விட்டுத் தப்பி ஓடி, முதலில் மாலைதீவிலும், பின்னர் சிங்கப்பூரிலும் தங்கி இருந்தபடி ஜனாதிபதிப் பதவியை இராஜினாமாச் செய்த கோட்டாபய ராஜபக்ஷ, ஐம்பது நாள்கள் அஞ்ஞாதவாசத்தின் பின்னர் நாடு திரும்பிவிட்டார்.

தமக்கென கொழும்பில் விசேடமாக ஒதுக்கப்பட்ட அரசு இல்லத்திலும் அவர் குடியேறிவிட்டார். அடுத்து என்ன என்பதே கேள்வி.

அவரை ஜனாதிபதி பதவியில் இருந்து விலகி வீட்டுக்குப் போகும்படிதான் மக்கள் போராட்டங்கள் வெடித்தன. மக்களின் கோரிக்கையே 'கோட்டா கோ ஹோம்' ஆகத்தான் இருந்தது.

அவர் பதவியை விட்டு விலகி விட்டார். தமக்கு எதிராக அரசியல் ரீதியில் போராடிய மக்களுடைய கிளர்ச்சியின் தீவிரத்தைக் கண்டு நடுங்கிய கோட்டாபய, அவர்களுக்கு எதிராகத் தமது நிறைவேற்றதிகாரத்தைப் பிரயோகித்து, அடக்குமுறையை ஏவி விடுவதைத் தவிர்த்து, தாமாகவே நாட்டை விட்டுத் தப்பி ஓடி, பெரும் களேபரத்தைத் தவிர்த்துக் கொண்டார்.

மக்கள் அவரை ஜனாதிபதி பதவியைத் துறந்து வீட்டுக்குப் போகும்படிதான் பணித்தார்கள். அவர் அதன்படி பதவியைத் துறந்து விட்டார். அதன் பின்னர் அவர் வீட்டுக்குத் திரும்பலாம். அவரை பதவியை துறந்து வீட்டுக்குப் போகும்படி கோரிய மக்களுக்கு அவர் வீட்டுக்கு திரும்புவதை அனுமதிக்க வேண்டிய கடப்பாடும் உண்டு.

அதனால்தான் அவரின் மீள் வருகையையொட்டி அதிக கூப்பாடுகள், எதிர்ப்புகள், குழப்பங்கள் ஏற்படவில்லை.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக நாட்டை விட்டு வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதியாக நாடு திரும்பி இருக்கின்றார்.

இனி, அரசியலுக்கு வருவதும் வராததும் அவரது மூத்த சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடுகின்றமை போல அவரே தீர்மானிக்க வேண்டிய விடயம்.

அதேபோல அவர் அரசியலுக்கு திரும்பினால் அவரை ஏற்பதும் ஏற்காமல் நிராகரிப்பதும் மக்கள் தீர்மானிக்கின்ற விவகாரம்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசியலுக்கு வரலாம். அல்லது வராமல் விடலாம்.

ஆனால் அவர் முன்னர் அமர்ந்திருந்த பதவி நிலைகளை ஒட்டி அவர் தலைக்கு மேல் கத்தி தொங்கிக் கொண்டிருக்கின்றது என்பதுதான் முக்கியம்.

பாதுகாப்புச் செயலாளராக அவர் இருந்தபோது ஆற்றிய, ஆற்றாமல் விட்ட பொறுப்புக்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில்வரை அவருக்கு எதிரான பல குற்றச்சாட்டுகள் உள்ளன. யுத்தக் குற்றங்கள், மனித மாண்புகளுக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் என்று அவற்றின் பட்டியல் நீண்டது.

அதேபோல அவர் ஜனாதிபதியாக வந்த பின்னர் அவருக்கும், அவரது அரசுக்கும் எதிராக சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகளும் அனேகம்.

அரசை வழிநடத்துதலில் எடுக்கப்பட்ட தவறான முடிவுகள், ஊழல்கள், மோசடி குற்றச்சாட்டுகள், அரச நிதியைத் தவறாகக் கையாண்டமை, மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் எனப் பல உண்டு.

அவை எல்லாம் தொடர்பிலும் பொறுப்புக் கூறல் கடப்பாடு அவருக்கு உள்ளது. அவர் நாடு திரும்பியமை அந்தப் பொறுப்பு கூறல் கடப்பாட்டை அவர் நிறைவு செய்யவும், நீதி தன் கடமையை ஆற்றவும் உதவும் என்பதால் அவர் வருகை எதிர்க்கப்படாமல் இருக்க வேண்டியதுதான்.

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிங்கப்பூர் ஜனாதிபதியும் வாழ்த்து!



இலங்கையின் 08 ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு சிங்கப்பூர் குடியரசின் ஜனாதிபதி ஹலிமா யாக்கோப் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரின் 57 ஆவது தேசிய தினம், 2022 ஓகஸ்ட் 08 ஆம் திகதி கொண்டாடப்பட்டதோடு அதனை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய வாழ்த்துச் செய்திக்கும், சிங்கப்பூர் ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவான தற்கும் ஜனாதிபதியின் பணிகள் வெற்றியடைவதற்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என ஹலிமா யாக்கோப் தனது வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தேயிலை பயிர்ச்செய்கைக்கான உரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்!

தேயிலை பயிர்ச்செய்கைக்கான யூரியா மற்றும் ஏனைய உரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் துஷார பிரியதர்சன இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறு தேயிலை தோட்ட சங்கங்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலைகள் ஊடாக உரங்கள் விநியோகிக்கப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரம் பெறுவதில் சிக்கல் இருப்பின் 1974 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறிவிக்குமாறும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அற்றைத் திங்கள் நிகழ்வு!

தமிழின் மூத்த படைப்பாளிகளும் தகைசான்ற ஆளுமைகளும், தமது வாழ்வியல் அனுபவங்கள், கலை, இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் முதலியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அற்றைத்திங்கள் நிகழ்வு 2022.09.10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்புத்தமிழ்ச்சங்கவிநோதன்மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபனின் தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் மருத்துவர் தி.ஞானசேகரன் (மூத்த எழுத்தாளர்) அவர்கள் உரை நிகழ்த்தவுள்ளார்.

## வெளிநாட்டில் இருப்பவர்கள் டொலர்களை செலுத்தி இலங்கையில் எரிவாயுவைப் பெற்றுக்கொடுக்க வாய்ப்பு




வெளிநாட்டில் இருப்பவர்கள் டொலர்களை செலுத்தி இலங்கையில் எரிவாயுவை முன்பதிவு செய்துதமது நண்பர்களுக்கு விநியோகிக்கும் முறைமை அடுத்த வாரம் முதல் அறிமுகப்படுத்தப்படும் என லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் நிறுவனத்திற்குத் தேவையான டொலர்களைக் கையிருப்பில் வைத்திருக்க முடியுமென நம்புவதாக அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

இதற்காக மிகவும் குறைந்த தொகையான 15டொலர்களைச்செலுத்த வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட நிகழ்வு!



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையில் உள்ள பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திறந்தவெளி அரங்கு நிர்மாணத்துக்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

1991 ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த பழைய மாணவர்களால் 45 லட்சம் ரூபா செலவில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கிற்கான முதலாவது அடிக்கல் பாடசாலையில் கால் நூற்றாண்டு காலமாக பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர் ஞான சூரியனால் நாட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்களால் இந்த அரங்கு நிர்மாணத்துக்கான அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
ஞாயிற்றுக்கிழமை 04.09.2022

# புதிய பிரிட்டிஷ் பிரதமர் யார்? நாளை மதியம் முடிவு தெரியும்

## ரிஷி சுனக்கை விட லிஸ் டிரஸ் முன்னணி

லண்டன்,செப்.04

இங்கிலாந்தில் பிரதமர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நிறைவு பெற்றது. நாளை திங்கட்கிழமை முடிவுகள் வெளியாக உள்ளன.

**போரிஸ் ஜோன்சன் இராஜினாமா**

இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் கொரோனா விதிமுறைகளை மீறி பிரதமர் அலுவலகத்தில் மது விருந்து நிகழ்ச்சிகளை நடத்திய விவகாரத்தில் சொந்த கட்சியான ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சிக்குள்ளேயே அவருக்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பியமையால் பிரதமர் மற்றும் கட்சி தலைவர் பதவியை அவர் இராஜினாமாச் செய்தார்.

அதை தொடர்ந்து, ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சியின் புதிய தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் தொடங்கியது. இங்கிலாந்தின் சட்டப்படி ஆளும் கட்சியின் தலைவராகத் தேர்வு செய்யப்படும் நபரே நாட்டின் பிரதமராக நியமிக்கப்படுவார்.

**வாக்கு பதிவு நிறைவடைந்தது**

அந்த வகையில் கொன்சர்வேட்டிவ் கட்சி தலைவர் பதவிக்கான தேர்தலில் இந்திய வம்சாவளியை சேர்ந்த முன்னாள் நிதி மந்திரி ரிஷி சுனக்குக்கும், தற்போதைய வெளியுறவு மந்திரி லிஸ் டிரஸ்சுக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. புதிய தலைவரைத் தேர்வு செய்ய கொன்சர்வேட்டிவ் கட்சியின் உறுப்பினர்கள் சுமார் 1.60 லட்சம் பேர் கடந்த சில வாரங்களாக தபால் மற்றும் ஒன்லைன் மூலமாக வாக்களித்து வந்தனர். இந்த வாக்குப் பதிவு நேற்று முன்தினம் மாலையுடன் முடிவடைந்தது. அதை தொடர்ந்து உடனடியாக வாக்குகளை எண்ணும் பணி தொடங்கியது.

**லிஸ் டிரஸ்ஸுக்கு வாய்ப்பு**

இந்திய நேரப்படி நாளை திங்கட்கிழமை மதியம் 12.30 மணியவில் வாக்கு எண்ணிக்கை முடிவடைந்து இறுதி முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன. இங்கிலாந்தை ஆளப்போகும் புதிய பிரதமர் யார் என்பது அப்போது தெரிந்துவிடும். தேர்தலுக்கு முன்பு நடத்தப்பட்ட பல்வேறு கருத்து கணிப்புகளில் ரிஷி சுனக்கை காட்டிலும், லிஸ் டிரஸ் தொடர்ந்து முன்னிலையில் இருந்து வந்தார். தற்போது தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகளிலும் லிஸ் டிரஸ்ஸுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருப்பது தெரியவந்துள்ளது. இதனால் இங்கிலாந்தின் புதிய பிரதமராக லிஸ் டிரஸ் தேர்வாக அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

**அடுத்து என்ன நடக்கும்?**

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் பிரதமர் போரிஸ் ஜோன்சன் நாளை மறுநாள் (செவ்வாய்க் கிழமை) ஸ்கொட்லாந்துக்கு சென்று அங்கு விடுமுறையை கழித்து வரும் ராணி 2 ஆம் எலிசபெத்தை நேரில் சந்தித்து முறைப்படி தனது ராஜினாமாவை அறிவிப்பார்.

அதன் பின்னர் அன்றைய தினமே தேர்தலில் வெற்றிப்பெற்ற லிஸ் டிரஸ் அல்லது ரிஷி சுனக் ராணியை சந்தித்து புதிய அரசை அமைக்க அனுமதி கோருவார். ராணி அதை ஏற்றுக்கொண்டு இங்கிலாந்தின் புதிய பிரதமரை நியமனம் செய்வார். ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோரல் கோட்டையில் புதிய பிரதமரை நியமிக்கும் விழா நடைபெறும்.

**அரச மரபை உடைத்து...**

இங்கிலாந்து அரச பாரம்பரிய நடைமுறைகளின்படி புதிய பிரதமரை நியமிக்கும் விழா இங்கிலாந்தின் பக்கிங்ஹாம் அரண்மனையில்தான் நடைபெறும். ஆனால் தற்போது ராணியின் உடல் நிலையை கருத்தில் கொண்டு அவர் பயணம் மேற்கொள்வதை தவிர்க்க டாக்டர்கள் அறிவுறுத்தியுள்ளதால் அரச மரபை உடைத்து ஸ்கொட்லாந்தில் இந்த விழா நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.





# கால்பந்து போட்டியில் சூடு மெக்சிகோவில் 4 பேர் பலி

மெக்சிகோ சிட்டி,செப்.04

மெக்சிகோவில் கால்பந்து போட்டியில் துப்பாக்கிகளுடன் வந்த மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். 4 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

மெக்சிகோநாட்டின்மோரேலோஸ்மாகாணம்யேகாபிக்ஸ்ட்லா நகரில் கால்பந்து போட்டி நடைபெற்று கொண்டிருந்தது. அந்த நகரின் முன்னாள் மேயர் ரெபுஜியோ அமரோ லூனா உள்பட ஏராளமானோர் கால்பந்து போட்டியை கண்டு ரசித்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு துப்பாக்கிகளுடன் வந்த மர்ம நபர்கள் சிலர் கால்பந்து போட்டியை பார்த்து கொண்டிருந்தவர்களை குறிவைத்து கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. உயிர் பயத்தில் அங்கிருந்த அனைவரும் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

எனினும் இந்த துப்பாக்கிச்சூட்டில் யேகாபிக்ஸ்ட்லா நகர முன்னாள் மேயர் ரெபுஜியோ அமரோ லூனா உள்பட 4 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

# 50 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு ஜேர்மனியில் இப்போது பணவீக்கம்

பேர்லின்,செப்.04

ஜேர்மனியில் மிக மோசமான பணவீக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

ரஷ்யா-உக்ரைன் இடையிலான போர் தொடங்கிய பிறகு சர்வதேச நாடுகள் ரஷ்யா மீது வரலாறு காணாத பொருளாதார தடைகளை விதித்தன. இந்த பொருளாதார தடைகள் காரணமாக ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் இறக்குமதியை நம்பியிருந்த நாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்தது. இதன் விளைவாக பல்வேறு ஐரோப்பியநாடுகளில்எரிபொருள், எண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலை கடுமையாக உயரத் தொடங்கியது.




மேலும் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளில் நுகர்வு பொருள்களின் விலை அதிகரித்ததால், பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அந்த வகையில் ஜேர்மனியில் கடந்த ஓகஸ்ட் மாதம் பணவீக்கத்தின் விகிதம் 8.8 வீதமாக அதிகரித்துள்ளது. இது ஜேர்மனியில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிக அளவிலான பணவீக்கம் என்று கூறப்படுகிறது. இதனால் ஐரோப்பிய மத்திய வங்கியின் வட்டி விகிதம் அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜேர்மனியில் கடந்த மே மாதம் 8.7 வீதமாகவும், ஜூலை மாதத்தில் 8.5 வீதமாகவும் இருந்த பணவீக்கம், ஓகஸ்ட் மாதத்தில் 8.8 வீதமாக உயர்ந்துள்ளது.

பணவீக்கத்தை கட்டுப்படுத்த போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், 2022 இறுதிக்குள் ஜேர்மனியில் பணவீக்கத்தின் சதவீதம் இரட்டை இலக்க எண்கள் வரை அதிகரிக்கும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.


# பாரசூட் திறக்கத் தாமதம்; டிக்டாக் பிரபலம் மரணம்

டிக்டாக் பிரபலமான பார்டஷி அழகி போட்டியில் இறுதி சுற்றுக்குள் நுழைந்துள்ளார்.

ஒட்டாவா, கனடா நாட்டின் ஒன்டரியோ மாகாணம் டொரண்டோ பகுதியை சேர்ந்த இளம்பெண் தன்யா பார்டஷி (வயது 21). கல்லூரி மாணவியான இவர் 2017 ஆம் ஆண்டு நடந்த ‘மிஸ் டீன் கனடா’ அழகிப் போட்டியில் பங்கேற்று இறுதி சுற்று வரை சென்றுள்ளார்.

தன்யா பார்டஷி டிக்டாக்கில் மிகவும் பிரபலமானவர். அவரை ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் டிக்டாக்கில் பின் தொடர்கின்றனர்.

இதனிடையே, தன்யா பார்டஷி வானில் இருந்து கீழே பாரசூட்டில் கீழே குதித்து சாகத்தில் ஈடுபடும் ஸ்கை டைவிங்கில் மிகவும் ஆர்வம் கொண்டவர். அவர், பல முறை 2 பேர் குதிக்கும் வகையில் உதவியாளருடன் வானில் இருந்து குதித்து ஸ்கை டைவிங் சாகம் செய்துள்ளார்.



பின்னர் பயிற்சி பெற்று தனியாக ஸ்கை டைவிங் செய்ய உரிமம் பெற்றார்.

இந்நிலையில், தன்யா பார்டஷி டொரண்டோவில் நேற்று தனியாக ஸ்கை டைவிங் செய்துள்ளார். விமானத்தில் இருந்து 4 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து தன்யா குதித்துள்ளார். ஆனால், அவர் தாமதமாக பாரசூட்டை திறந்துள்ளார்.

இதனால், பாரசூட் முழுமையாக திறந்து வேலை செய்வதற்குள் அவர் தரையில் வேகமாக விழுந்தார். இதையடுத்து, தன்யாவை மீட்ட மீட்புக்குழுவினர் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். தன்யாவை பரிசோதித்த டாக்டர் கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என அறிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பிரம்மாண்டமான விநாயகர் சிலைகள் சென்னையில் இன்று கடலில் கரைப்பு





சென்னை,செப்.04

சென்னையில் விநாயகர் சிலைகளை கடலில் கரைப்பதற்கான ஊர்வலம் இன்று நடக்கிறது. பாதுகாப்பு பணியில் 15 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுகின்றனர்.

விநாயகர் சதுர்த்தி பண்டிகை கடந்த 31 ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

இதையொட்டி தமிழகத்தில் இந்து முன்னணி உள்ளிட்ட அமைப்புகள் சார்பில் பொது இடங்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட சிலைகளும், சென்னையில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிலைகளும் நிறுவப்பட்டு வழிபாடு செய்யப்பட்டன. சென்னையில் வைக்கப்பட்ட சிலைகளில் 1,352 சிலைகள் பிரமாண்டமானவை ஆகும். அதேபோன்று ஆவடி பொலிஸ் சரகத்தில் 503 சிலைகளும், தாம்பரம் பொலிஸ் சரகத்தில் 699 சிலைகளும் விதவிதமான வடிவங்களில் வைக்கப்பட்டன. இதில் சிறிய வகை சிலைகள் நீர்நிலைகளில் தொடர்ந்து கரைக்கப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் பெரிய விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான ஊர்வலம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது.

விநாயகர் ஊர்வலம் அமைதியான முறையில் நடைபெறுவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டு உள்ளனர். இதற்காக ஒவ்வொரு விநாயகர் சிலையும் பொலிஸ் பாதுகாப்புடன் ஊர்வலமாக எடுத்து வரப்பட உள்ளது.

சென்னை பொலிஸ் கமினர் சங்கர் ஜிவால் உத்தரவின்பேரில் 15 ஆயிரம் பொலிஸாரும், 2 ஆயிரம் ஊர்க்காவல்படை வீரர்களும் விநாயகர் சிலை ஊர்வல பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். பதற்றம் நிறைந்த இடங்களில் அதிரடிப்படை பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட இருக்கின்றனர்.

சிலைகள் கரைக்கப்படும் கடற்கரை பகுதியில் அவசர உதவிக்கு தீயணைப்பு வாகனங்கள், அம்ப லன்ஸ்கள், மோட்டார் படகுகளுடன் நீச்சல் தெரிந்த தன்னார்வலர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

கடற்கரை பகுதியில் தற்காலிக கண்காணிப்பு கோபுரங்கள் அமைத்தும் பொலிஸார் கண்காணிப்பு பணியை மேற்கொள்கின்றனர்.

விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் மதியம் 12 மணிக்கு தொடங்கி இரவு வரை நடைபெற உள்ளது. ஊர்வல பாதைகள், சிலைகள் கரைக்கும் இடங்களில் கட்டுப்பாடுகளை மீறினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் உயரதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## தன் பத்து மாதக் குழந்தையைக் கரையில் கிடத்திவிட்டு கால்வாயில் குதித்து இளைஞனைக் காப்பாற்றிய பெண்



போபால்,செப்.04

தன்னுயிரைப் பொருட்படுத்தாமல் துணிச்சலாக செயல்பட்ட இளம்பெண் ரபீனாவை அந்த பகுதியினர் பாராட்டினர்.

மத்திய பிரதேசத்தில் கால்வாயில் மூழ்கிய 25 வயது இளைஞன் அதிர்ஷ்டவசமாக அங்கு வந்த ஒரு பெண்ணால் உயிர் தப்பினார். அந்த வாலிபர் நீரில் தத்தளிப்பதை கண்ட அந்த பெண் தண்ணீரில் குதித்து அவரை பாதுகாப்பாக இழுத்தாள். இருப்பினும் அந்த நபரின் நண்பரை காப்பாற்ற முடியவில்லை.

ஒன்பது வயதான ரபீனா கஞ்சர் என்ற பெண் மணி, கடந்த வியாழக்கிழமை தண்ணீர் குழாயில் தண்ணீர் நிரப்புவதற்காக தனது 10 மாத குழந்தையை கையில் ஏந்திக்கொண்டு வெளியே சென்றிருந்தார். தண்ணீர் குழாய் அருகே இருக்கும் கால்வாயில், இரண்டு வாலிபர்கள் அதை எப்படி கடப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தனர். கால்வாயை தாண்டி உள்ள ஒரு வயலில் பூச்சிக்கொல்லிகளை தெளிக்க அவர்கள் சென்றிருந்தனர். அவர்கள் எதிர்பக்கம் கடந்து சென்றுவிட்டனர். அவர்கள் இருவரும் திரும்பி வரும் வழியில், அன்று மதியம் பலத்த மழை பெய்து, இரு கிராமங்களையும் பிரிக்கும் அந்த கால்வாயில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை இருவரும் கண்டனர். உடனே மறுபக்கத்தில் இருந்த அவர்களது நண்பர்கள் அவர்களை கடக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டனர்.

மறுபக்கத்தில் இருந்த அவர்களது நண்பர்கள் பைக்கின் சாவியை இருவரையும் நோக்கி வீசி அவர்கள் இருவரும் மாற்றுப் பாதையில் சென்று தங்கள் கிராமத்தை அடையுமாறு அறிவுறுத்தினர். இருப்பினும் பைக் சாவிகள் மறுபுறம் சென்றடையாமல், பெருக்கெடுத்து ஓடும் ஆற்றுநீரில் விழுந்தன. அதன்பின், மறுபுறம் இருந்தவர்கள் பல முறை எச்சரித்தனர். இதையெல்லாம் ரபீனா பார்த்துக் கொண்டிருந்தார். அவளுக்கு ராஜு என்ற இளைஞனை தெரியும். அவரும் அவர்களிடம் ஆற்றை கடக்க வேண்டாம் என்று எச்சரித்தார். அதை பொருட்படுத்தாமல் இரண்டு பேரும் பெருக்கெடுத்து ஓடும் கால்வாயை கடக்க முடிவு செய்தனர். கால்வாயில் இறங்கிய சிறிது நேரத்திலேயே வேகமான நீரோட்டத்தில் சமநிலை இழந்து நீரில் இளைஞர்கள் மூழ்கத் தொடங்கினர். உடனே ராஜு, அக்கா காப்பாற்று, யாராவது காப்பாற்றுங்கள் என்று கூச்சலிட்டார். இதை கண்ட அந்த பெண் தண்ணீரில் குதித்து அவரை பாதுகாப்பாக இழுத்தாள். இருப்பினும் அந்த நபரின் நண்பரை காப்பாற்ற முடியவில்லை. பின் ராஜுவின் நண்பர் ஜிதேந்திராவின் உடல் மீட்புக் குழுவினரால் அடுத்த நாள் கால்வாயில் இருந்து மீட்கப்பட்டது.

இந்த சம்பவம் குறித்து, ரபீனா கஞ்சர் கூறுகையில், நான் இருமுறை யோசிக்கவில்லை. அவர் எனது கிராமத்தைச் சேர்ந்தவர், எனக்கு அவரைத் தெரியும். எனக்கு நீச்சல் தெரியும், நான் அவரை காப்பாற்றுவேன் என்பதில் உறுதியாக இருந்தேன். நான் மற்றவரைக் காப்பாற்ற முயற்சித்தேன், ஆனால் முடியவில்லை என்றார். தன்னுயிரை பொருட்படுத்தாமல் துணிச்சலாக செயல்பட்ட இளம்பெண் ரபீனாவை அந்த பகுதியினர் பாராட்டினர். இந்த துணிச்சலான சாதனைக்காக அந்த பெண்ணுக்கு பொலிஸார் ரொக்கப்பரிசு வழங்கியுள்ளனர். பொலிஸார் தலைமையில் நடந்த மீட்பு பணியில், ரபீனாவின் சகோதரரும் ஈடுபட்டார். அவருக்கும் வெகுமதி கிடைத்துள்ளது.



## புதிய கட்சி குறித்து இன்று ஜம்முவில் குலாம்நபி ஆசாத் அறிவிக்கின்றார்

ஜம்முவில் இன்று நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தனது புதிய கட்சியின் பெயரையும், கொடியையும் வெளியிடுகிறார் குலாம்நபி ஆசாத்.

பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் குலாம்நபி ஆசாத்தின் போஸ்டர்கள் வைக்கப்பட்டு உள்ளன.

காங்கிரஸ் கட்சியில் 50 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த குலாம்நபி ஆசாத் கடந்த மாதம் 26 ஆம் திகதி அந்தக் கட்சியில் இருந்து விலகினார்.

73 வயதான அவர் காங்கிரஸ் கட்சி மூலம் ஜம்மு காஷ்மீர் முதல்-மந்திரி, மத்திய மந்திரி உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்தார். ராகுல் காந்தியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக குலாம்நபி ஆசாத் காங்கிரஸில் இருந்து வெளியேறினார். அவர் ராகுலை கடுமையாக சாடி இருந்தார். குலாம்நபி ஆசாத்துக்கு ஆதரவாக காஷ்மீரில் பல காங்கிரஸ் தலைவர்கள் விலகினார்கள்.

காங்கிரஸில் இருந்து விலகிய அவர் புதிய கட்சியை தொடங்கி பா.ஜனதாவுடன் சேர்ந்து தேர்தலை சந்திப்பார் என்றும் கூறப்பட்டது. புதிய கட்சியை விரைவில் தொடங்க இருக்கிறார் என அவர் ஏற்கனவே தெரிவித்து இருந்தார். இந்தநிலையில் குலாம் நபி ஆசாத் தனது புதிய கட்சியை இன்று அறிவிக்கிறார். ஜம்முவில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அவர் தனது கட்சியின் பெயரையும் கொடியையும் வெளியிடுகிறார்.

இதற்காக குலாம்நபி ஆசாத் டெல்லியில் இருந்து இன்று காலை ஜம்மு சென்றார். அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் குலாம்நபி ஆசாத்தின் போஸ்டர்கள் வைக்கப்பட்டு உள்ளன. ஜம்மு காஷ்மீரில் விரைவில் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் முதலமைச்சர் பதவியை குலாம்நபி ஆசாத் கைப்பற்றுவார் என்று அவரது ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

# பெண்களின் டிஜிட்டல் அறிவை மேம்படுத்தும் பயிற்சிப்பட்டறை







சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தேர்தல் கண்காணிப்பு நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட, ஜனனி டிஜிட்டல் மேம்பாட்டுதிட்டத்தின் பயிற்சிப்பட்டறை, நேற்று சனிக்கிழமை ஏறாவூரில் நடைபெற்றது.

ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற இப்பயிற்சிப்பட்டறையில் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், மட்டக்களப்பு மாவட்ட பெண் அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் பெண் சிவில் சமூகப் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வின் சிறப்பு பேச்சாளராக ஐரெஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க கலந்து கொண்டார். வளவாளர்களாகக் கலாவர்ஷி கனகரட்ணம் மற்றும் நிஸ்ஸங்க்க ஹரேந்திர ஆகியோர் பங்குபற்றினர்.

கபே நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தலைமைத்துவத்தின் கீழ், இந்நிகழ்வை மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கந்தவே காண்டீபன் மற்றும் ஜனனி, திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜே.எவ். காமிலா பேகம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்திருந்தனர். இப் பயிற்சிப்பட்டறையில் இன்றைய டிஜிட்டல் உலகத்தில் பெண்கள், சிறுமிகளின் தொழில்நுட்ப பாதுகாப்பு நடவடிக்கைகள், தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வழிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

# மட்டக்களப்பு மாணவருக்கு உடற் பயிற்சி நிலையங்கள்

## மாநகரசபையால் ஏற்பாடு





(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் தேக ஆரோக்கியத்தைப் பேணவும், உடற்பருமன் அதிகரிப்பால் அவதியுறும் மாணவர்களின் நலன் கருதியும் சிறுவர்நேய மாநகர செயற்திட்டத்தினூடாக யுனிசெவ் மற்றும் செரி நிறுவனங்களின் நிதிப்பங்களிப்புடன் உடற்பயிற்சி உபகரணங்களுடன் கூடிய உடற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிவானந்தா தேசிய பாடசாலை மற்றும் கல்லடி முகத்துவாரம் ஆகிய பாடசாலைகளில் அமைக்கப்படவுள்ள உடற்பயிற்சி நிலையங்களுக்கான உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

ஏற்கனவே புனித மிக்கேல் தேசிய பாடசாலை, வின்சென்ட் மகளிர் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு இந்து கல்லூரி மற்றும் புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை ஆகியவற்றில் இப்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன, வெகுவிரைவில் இப்பயிற்சி நிலையங்கள் மாணவர்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளன என மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

# பெண்கள் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிதியுதவி

## கல்முனையன்ஸ் போரம் விநியோகம்





(நூருள் ஹுதா உமர்)

கல்முனை பிராந்தியத்தை மையப்படுத்தியதாக பல்வேறுபட்ட வாழ்வாதார மேம்பாட்டு நல திட்டங்களையும், நிவாரண விநியோகங்களையும் கல்முனையன்ஸ் போரம் முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் நாட்டில் நிலவிவருகிற பொருளாதார நெருக்கடி சூழ்நிலை காரணமாக வாழ்வாதாரம் முடக்கப்பட்ட – பெண்கள் தலைமை தாங்குகின்ற – குடும்பங்களுக்கான நிவாரண நிதி விநியோகிக்கும் செயற்றிட்டம் ஒன்றை கல்முனையன்ஸ் போரம் நேற்று வெள்ளிக்கிழமை நடைமுறைப்படுத்தியது.

மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை, இஸ்லாமபாத் மற்றும் நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களிலிருந்து பயனாளிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு தலா ரூபா 20,000 நிதி நிவாரணம் இந்த நிகழ்வில் வழங்கிவைக்கப்பட்டது.

கணவனை இழந்த மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் தலைமை தாங்குகின்ற குடும்பங்கள் இத்திட்டத்தின் பயனாளிகளாக தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நாட்டின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கு ரணிலின் முயற்சிக்கு பிரித்தானிய பிரதமர் பாராட்டு

இலங்கை மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகாண்பதற்கு முன்னுரிமையளிக்கும், அரசாங்கமொன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள முயற்சிகளுக்கு பிரித்தானியப் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றமைக்கு வாழ்த்துத் தெரிவித்து அனுப்பி யுள்ள செய்தியிலேயே பிரித்தானியப் பிரதமர் இத னைத் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக கொள்கைகளைப் பின்பற்றுவது, ஜனநாயக இணக்கப்பாட்டை எட்டுவது என்பன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு வழிவகுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீதான பிரித்தானிய அரசாங்கத்தின் கரிசனையை மீளவலியுறுத்தியுள்ள பிரதமர் பொரிஸ் ஜோன்சன், நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார, சமூக சவால்களுக்கு மத்தியில், பிரித்தானியா, இலங்கை மக்களுக்குத் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனக் கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் மிக விரைவில் உங்களால் முன்னேற்றத்தைக் காண முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

இந்த விடயத்தில் இலங்கைக்கு உதவ, எமது சர்வதேச பங்குதாரர்களுடன் பிரித்தானியா இணைந்து செயற்படக் காத்திருக்கின்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



மேலும் இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் நிலையான மற்றும் கணிசமான முன்னேற்றத்தை அடைவதற்கு, இரண்டு அரசாங்கங்களும் இணைந்து செயற்பட முடியும் எனவும் பிரித்தானிய பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வு, அணுகுமுறை மாற்றத்துடனான இலங்கையின் மனித உரிமைச் சான்றுகளை நிரூபிக்க இலங்கை அரசாங்கத்துக்கு சிறந்த தருணமாக இருக்கும்.

இந்த விடயங்களில் அனைவரும் உணரக்கூடிய உண்மையான முன்னேற்றத்தை உருவாக்க, பிரித்தானியாவும், சர்வதேச சமூகமும், இலங்கையுடன் இணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது.

அண்மையில் அறிவிக்கப்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான வர்த்தக திட்டம் தொடர்பில் சுட்டிக்காட்டிய பிரித்தானிய பிரதமர், இந்தத் திட்டத்தின் மூலம் இலங்கை ஏற்றுமதி செய்யும் மொத்தப் பொருள்களின் பெரும்பகுதிக்கு, வரிச் சலுகை அணுகுமுறை மூலம் பயனடைவதற்கான வாய்ப்பு கிட்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எமது இருதரப்பு உறவைப் பலப்படுத்துவதன் மூலம் வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவற்றை மேலும் மேம்படுத்துவதற்கான பல வாய்ப்புக்களை நாம் கண்டறிய முடியும்.

பசுமை பொருளாதாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு மூலம், இலங்கைக்கு ஆதரவு வழங்குவதற்கான உறுதியான சந்தர்ப்பங்கள் பிரித்தானியாவிடம் உள்ளதென நான் நம்புகிறேன் எனவும் பிரித்தானிய பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடந்த மே மாதம் காலநிலை மாற்றம் தொடர்பில் இரு நாட்டுத் தலைவர்களும் தாம் அடைய எதிர்பார்த்திருக்கும் இலக்குகளைப் பரிமாறிக் கொண்டமை தொடர்பிலும் பிரித்தானிய பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தனது 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ள நிலையில், பிரித்தானியா – இலங்கை இடையிலான உறவு மேன்மேலும் பலமடையுமென நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## எரிவாயு விலை மீண்டும் குறைக்கப்படும் வாய்ப்பு?

### லிற்றோ அறிவிப்பு




எரிவாயு விலை எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் குறைக்கப்படும் என லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

## காரைதீவிலிருந்து மண்டூருக்கு நேற்று திருத்தல பாதயாத்திரை

(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவில் இருந்து மண்டூர் முருகன் ஆலயத்திற்கான திருத் தல பாதயாத்திரை நேற்று சனிக்கிழமை அதிகாலை ஆரம்பமாகியது.

முருகப்பெருமான் திருவுருவப் படங்கள் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட ஏழு உழவு இயந்திரங்கள் முன்னதாக செல்ல அடியார்கள் அரோகரா கோசம் விண்ணைப்பிளக்க பாதயாத்திரை நகர்ந்தது.

நேற்று சனிக்கிழமை அதிகாலை நான்கு மணியளவில்மாவடிஸ்ரீகந்தசுவாமிஆலயத்தில் இருந்து புறப்பட்ட பாதயாத்திரை ஐந்து மணியளவில் கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்தது. அங்கிருந்து தொடர்ந்து கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயம், ஸ்ரீ முருகன் ஆலயத்தை அடைந்து நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி, சவளக்கடை, நாவிதன்வெளி, வேப்பயடி, தம்பலவத்தை சென்று மண்டூர் ஆலயத்தை சென்றடைந்தது பாத யாத்திரை.

கடந்த இரண்டு வருடங்களுக்கு பிற்பாடு இடம்பெறும் பாதயாத்திரை என்பதால், சுமார் 3,000 அடியார்கள் இம்முறை இதில் கலந்து கொண்டனர்.

# திருமலை மாவட்ட இளைஞர்களுக்கு வார இறுதியில் வதிவிடப் பயிற்சி நெறி






(ஹஸ்பர் ஏ ஹலீல்)

‘மாற்றத்திற்கான இளைஞர்கள்’ எனும் தொனிப்பொருளில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அகம் மனிதாபிமான வள நிலையம் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இளைஞர்களின் ஊடாக சமாதானத்தினை ஏற்படுத்தல் எனும் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கான தலைமைத்தும் மற்றும் முரண்பாடுகளை தீர்க்கும் தந்திரோபாயம் தொடர்பான வதிவிடப் பயிற்சியின் ஆரம்ப வைபவம் நேற்று திருகோணமலை மாவட்டத்திலுள்ள சர்வோதயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இதே போன்றதொரு வதிவிடப் பயிற்சியானது கடந்த ஓகஸ்ட் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 46 தமிழ் மொழி மூல இளைஞர்களுக்கு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இச்செயலமர்வு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள மூவின இளைஞர்கள் 45 பேரை ஒன்றிணைத்து வதிவிடப்பயிற்சியாக நேற்றும் இன்றும் நடைபெறுகின்ற மை குறிப்பிடத்தக்கது.

இதன் ஆரம்ப நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் சின்னத்தம்பி ரவிகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

அகம் மனிதாபிமான வள நிலைய நிறுவனத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் பிரதி இணைப்பாளர் அ.மதன், வளவாளர் எம்.மிருணாளன் மற்றும் திட்ட உத்தியோகத்தர் த.அரவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். திட்ட இணைப்பாளர் செல்வி நாகேஸ்வரன் மிரேகா நெறியாள்கை செய்கிறார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.09.2022இல் வெளியிடப்பெற்றது.